# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035
தொலைபேசி எண். 044 - 2951 5590

**ஆணை நாள் - 13.05.2026**

**முன்னிலை**

## திரு அபய் குமார் சிங், இகாப (ஓய்வு)
## மாநில தகவல் ஆணையர்

*****

**வழக்கு எண். SA 18315/F/2025**

திரு.P.துளசி அய்யா .. மேல்முறையீட்டாளர்

/எதிர்/

பொதுதகவல் அலுவலர்,
துணைப்பதிவாளர் (வீட்டுவசதி),
துணைப்பதிவாளர்
(வீட்டுவசதி) அலுவலகம், .. பொது அதிகார அமைப்பு
திருச்சிராப்பள்ளி மண்டலம்,
திருச்சிராப்பள்ளி மாவட்டம்-620020.

**ஆணை**

இவ்வாணையத்தில் இன்று 13.05.2026 நடைபெற்ற விசாரணைக்கு மனுதாரர் திரு.P.துளசி அய்யா அவர்கள் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பாக, பொதுத்தகவல் அலுவலர் திரு.கோ.செல்வன் சத்ரபதி, கூட்டுறவு சார்பதிவாளர் / அலுவலக கண்காணிப்பாளர், 16/1, சமது பள்ளிதெரு, காஜா நகர், திருச்சி-20 அவர்கள் ஆஜரானார். இதனை ஆணையம் பதிவு செய்கிறது.

2. மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன் கீழ், 21/07/2025 தேதியிட்டு தாக்கல் செய்துள்ள மனுவில் தீரன் நகரில் பணியாளர்களுக்கு ஒதுக்கீடு செய்தது போக மீதம் உள்ள வீட்டு மனைகள் எத்தனை என்பன போன்ற தகவல்களை 5 இனங்களில் கோரியுள்ளார்.

3. அம்மனுவைப்பெற்ற பொதுத்தகவல் அலுவலர் 14.08.2025 நாளிட்ட கடிதம் மூலம் தகவல் வழங்கியுள்ளார். மனுதாரர் தனக்கு சரியான தகவல் வழங்கவில்லை என தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 19(1)ன் கீழ் 22.08.2025 நாளிட்ட முதல் மேல்முறையீட்டு மனுவினை மேல்முறையீட்டு அலுவலருக்கு தாக்கல் செய்துள்ளார். மேல்முறையீட்டு அலுவலர் 15.09.2025 நாளிட்ட கடிதம் மூலம் தகவல் வழங்கியுள்ளார். இந்நிலையில் தகவல் அறியும் உரிமைச் சட்டம் 19(3)ன் கீழ் 04.12.2025 நாளிட்ட இரண்டாம் மேல்முறையீட்டு மனுவினை ஆணையத்திற்கு தாக்கல் செய்துள்ளார். மனுதாரர் தாக்கல் செய்துள்ள இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு இன்று (13.05.2026) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

4. இன்றைய நேரடி விசாரணைக்கு ஆஜரான பொதுதகவல் அலுவலர் மனுதாரர் 6(1) மனுவில் கோரிய இனங்கள் குறித்து 30.04.2026 தேதியிட்ட கடிதத்தின் மூலம் தகவல்கள் வழங்கப்பட்டிருப்பதாக கூறி ஆவணங்களை ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார்.

5. இன்றைய விசாரணையில் ஆணையத்தின் முன் உள்ள ஆவணங்களை பரிசீலனை செய்கையில் மனுதாரருக்கு உரிய தகவல்கள் 30.04.2026 நாளிட்ட கடிதங்கள் மூலம் வழங்கப்பட்டிருப்பதை இவ்வாணையம் ஏற்கிறது. இருப்பினும் கீழ்கண்ட உத்தரவை பிறப்பிக்கிறது

- **“மனுதாரரின் தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 6(1)ன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில் மனுதாரர் கோரியுள்ள தகவலை முழுமையாக வழங்காத அப்போதைய பொதுத்தகவல் அலுவலர் திரு.கோ.செல்வன் சத்ரபதி, கூட்டுறவு சார்பதிவாளர், திருச்சி அவர்களுக்கு சட்ட பிரிவு 20(1) மற்றும் 20(2)ன் கீழ் ஏன் நடவடிக்கை எடுக்கக்கூடாது என்பதற்கான அவரது எழுத்து மூல விளக்கத்தினை 18.06.2026 தற்போதைய பொதுதகவல் அலுவலர் அவர்கள் ஆணையத்தில் நேரில் ஆஜராகி சமர்ப்பிக்குமாறு இவ்வாணையம் ஆணையிடுகிறது”.**

**ஒம்/-(அபய் குமார் சிங்)**
**மாநில தகவல் ஆணையர்**

(ஆணையத்தின் ஆணைப்படி)

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 18315/F/2025</u>**

பெறுநர்

**<u>பொது அதிகார அமைப்பு:-</u>**

பொதுதகவல் அலுவலர்,
துணைப்பதிவாளர் (வீட்டுவசதி),
துணைப்பதிவாளர்
(வீட்டுவசதி) அலுவலகம்,
திருச்சிராப்பள்ளி மண்டலம்,
திருச்சிராப்பள்ளி மாவட்டம்-620020.

**<u>மேல்முறையீட்டாளர்:-</u>**

திருமதி.P.துளசி அய்யா,
எண்.474, 11வது குறுக்குத்தெரு,
தீரன் நகர்,
திருச்சி-620009.

Copy to file: KR/PA